சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி

இடைமனு எண்.3/2021 ல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ 1, நீ.ம.சா.ஆ 2.

என் மனைவி வாதி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நீதிபேராணை மனு எண். 17425/2017 என்ற மனுவில் ஏற்கனவே மேலகரம் கிராமத்தில் உள்ள சொத்தை பொறுத்து அனுமதி வழங்கப்படாது ரத்து செய்து மீண்டும் அனுமதி வழங்குவது சம்பந்தமான உத்தரவுகளை பிறப்பிக்குமாறு கூறப்பட்டிருந்தது என்றால் சரிதான். அதன்பிறகு 1ம் பிரதிவாதி ஆட்சேபனை தெரிவித்திட போதுமான அவகாசம் வழங்கவில்லை என்ற காரணத்திற்காக 1ம்பிரதிவாதி தரப்பில் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நீதிபேராணை மனு எண்.14773/2025 என்ற மனுவை தாக்கல் செய்து தடை உத்தரவு பெற்றுள்ளார் என்றால் சரிதான். நீதிபேராணை மனு எண்.14773/2025 ல் 28.5.2025ம் தேதியிட்ட உத்தரவு பி.வா.சா.ஆ 3 ஆகும். நீதிபேரானை எண். 17425/2017 ல் வழங்கப்பட்ட உத்தரவு பி.வா.சா.ஆ 4 ஆகும். இந்நீதிமன்றத்தில் 1,2 பிரதிவாதிகள் நீதிமன்ற ஆணையர் மீண்டும் நியமனம் செய்ய கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டதால் அதனை எதிர்த்து சீராய்வு மனு எண். 541/24 தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த மனுவின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ 5 ஆகும். வழக்கு சொத்தின் புல எண்.763/49 ஆகும். மேலகரம் கிராமத்தில் நத்தம் நிலவரி திட்ட கணக்கு குறித்து தமிழ்நாடு அரசு அதனை ரத்து செய்து விட்டதாக அரசிதழிலில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அரசிதழ் வெளியீடு நகல் பி.வா.சா.ஆ 6 ஆகும். வழக்குரையில் கூறப்பட்டுள்ள சொத்துக்கள் கடந்த 1968ம் ஆண்டு எனது தகப்பனார் கிரையம் பெற்ற ஆவணத்தில் காணப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 4

ஆவணத்தில் கண்டுள்ள சொத்தில் பரப்பளவு எனது அண்ணன் ராமகிருஷ்ணனுக்கு உயில் மூலம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த உயில் வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உயிலில் வீட்டோடு சேர்த்து என் அண்ணனுக்கு என் அப்பா கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த வீட்டை தான் என் அண்ணனிடம் இருந்து பிரதிவாதி வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அதில் பிரதிவாதி அடிதளத்தை வைத்து கொண்டு மேல்பகுதியை இடித்து வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அடித்தளத்தை இடிக்காமல் கட்டியுள்ளார். ஆனால் அதிகமான பரப்பில் வீடு கட்டியுள்ளார். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1,3,5 முதல் 7 ஆகிய ஆவணங்கள் சட்டவிரோதமாக உருவாக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் செல்லாத நிலையில் எனது வழக்கு சட்டபடி நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் சட்டத்திற்கு புறம்போக அரசு புறம்போக்கு நிலத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் முதல் உயில் ரத்து செய்யப்பட்டு என் யோசனையின் பேரில் 2 வதாக உயில் ஆவணம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. உயில் ஆவணம் என் தகப்பனரால் எழுதப்பட்டது. எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. என் வழக்கு காலவரையறை சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் வழக்கு பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்) எஸ். முருகவேல்,<br>
கூடுதல் சார்பு நீதிபதி,<br>
தென்காசி.